# பொருளடக்கம்


| தலைப்பு | பக்க எண் |
| --- | --- |
| 1. RTI-ஐபயன்படுத்தி POA சட்ட நடைமுறைப்படுத்துதலைக் கண்காணித்தல் | 1 |
| 2. மாவட்ட அளவில் அறிக்கைகளை சேகரிப்பது | 9 |
| 3. RTI மாதிரி படிவங்கள் | 24 |

# 1. RTI–ஐ பயன்படுத்தி POA சட்ட நடைமுறைப்படுத்துதலைக் கண்காணித்தல்

இந்த அத்தியாயத்தில் சமூக நீதிக்காக POA–வுடன் சேர்த்து கீழ் வரும் கருவிகளை ஏன், எவ்வாறு பயன்படுத்துவது என்பதை நீங்கள் அறிவீர்கள்:

- குற்ற வழக்கில் குற்றவாளிகள் விடுவிக்கப்படும்போது யாரை அதற்குப் பொறுப்பாளியாக்குவது என்பது பற்றிய இந்திய உச்சநீதிமன்றத்தின் உத்தரவு
- தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

இவை அனைத்தையும் PoA–வுடன் சேர்த்துப் பயன்படுத்தும்போது அதன் திறனை வெகுவாக உயர்த்துகிறது. எங்கள் நோக்கமானது ஏற்கனவே இருக்கின்ற (அல்லது இருக்க வேண்டிய) அறிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பெறுவது.

## 1.1 தகவல் அறியும் உரிமை

மாநில வழிமுறைகள் ஆரோக்கியமாக உள்ளதா என்பதை அறிவதற்கான சிறந்த கருவி தகவல் அறியும் உரிமைச் சட்டம், **2005** ஆகும். எனினும், இது கூர்மையான கருவியாக இருப்பதால் – புத்திசாலித்தனத்துடனும், சரியாகவும் பயன்படுத்த வேண்டும்.

ஜனநாயகத்தில், குடிமக்களுக்கு அவர்களின் பிரதிநிதிகளும் அரசு ஊழியர்களும் என்ன செய்கிறார்கள் என்பதை அறியும் உரிமை இருக்கிறது. தகவல் என்பது 'ஜனநாயகத்தின் நாணயம்'. *உத்தரபிரதேசம் எதிர் ராஜ்நாராயண் வழக்கில் தகவல் அறியும் உரிமையானது ஷரத்து 19(1)(a)ல் பேச்சுரிமை மற்றும் கருத்துரிமை போலவும், ஷரத்து 21ல் உள்ள உயிர்வாழும் உரிமை போல உள்ளார்ந்தது.* ஷரத்து 21ன் பரந்த எல்லையின் கீழ் வருகின்ற 'தெரிந்து கொள்ளும் உரிமை' குடிமகனின் தொழில்சார்ந்த வாழ்க்கைக்கு இன்றியமையாதது. மேலும், அது தெரிவிப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்பவர்கள் மீது அதிக பொறுப்பைச் சுமத்துகிறது. ஆகவே, தகவல் அறியும் உரிமை ஒரு அடிப்படை உரிமையாகும் *(அஞ்ஜனி பரத்வாஜ் மற்றும் பிறர் எதிர் இந்திய யூனியன் மற்றும் பிறர் என்ற சிவில் ரிட் மனு எண் **436/2018** வழக்கில் இந்திய உச்சநீதிமன்றம்).*

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ல் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் இந்தியக் குடிமக்களுக்கு பொதுத் தகவல் அதிகாரியிடமிருந்து தகவல்களைப்

பெற அதிகாரம் அளிப்பதோடு அரசாங்கத்தையும் அதன் நிறைவேற்றுனர்களையும் மேலும் பொறுப்புடையவர்களாகவும், கடமையுள்ளவர்களாகவும் மாற்றியுள்ளது. இது அரசாங்கம் தானாக முன்வந்து பொது வெளியில் அனைத்து தகவல்களையும் பதிவேற்ற வேண்டும் என வலியுறுத்துகிறது. குடிமக்கள் தகவல்களைக் கேட்பது முறைப்படியானதாக அன்றி விதிவிலக்காக மட்டுமே இருக்க வேண்டும் [RTI பிரிவு 4(2)]. ஒருவேளை குடிமகனுக்கு தகவல் கேட்டு விண்ணப்பிக்கத் தெரியவில்லை என்று தகவல் அதிகாரியிடம் உதவி கேட்டால் அவர் அந்தக் குடிமகனுக்கு தகவல் கேட்டு விண்ணப்பம் எழுதுவதற்கு உதவ வேண்டும் [RTI பிரிவு 5(3)]. வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடிமக்கள் தாங்கள் கேட்கும் தகவலுக்குப் பணம் செலுத்தத் தேவையில்லை.

அரசாங்கத்தின் தகவல்களை அணுகுவதற்கான சட்டப்பூர்வ உரிமை, பொது அமைப்புகளின் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதன் மூலமாக ஜனநாயகத்தை வலுப்படுத்துகிறது. இது வெறும் வாக்கு செலுத்துவதிலிருந்து ஒருவரது வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய விஷயங்களில் முடிவெடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவது வரை ஆட்சியில் குடிமக்களுடைய பங்களிப்பின் தரத்தை மேம்படுத்துகிறது.

> *லல்லி பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த கட்டிடத் தொழிலாளி. அவரது ஆதிக்கச் சாதி முதலாளி லல்லியின் சாதியைத் தரக்குறைவாகச் சொல்லி அவமானப்படுத்தினார். லல்லி அவரால் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டார். பட்டியல் சமூகத்தினரின் உரிமைகளுக்காக வேலை செய்யும் ஒரு உள்ளூர் அரசு சாரா தொண்டு நிறுவனம் லல்லி உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க உதவி செய்தது. எனினும், காவல் அதிகாரிகள் புகாரின் மீது நடவடிக்கை எடுக்க எந்த ஆர்வமும் காட்டவில்லை. அந்த அரசு சாரா தொண்டு நிறுவனம் காவல் நிலைய பொது தகவல் அதிகாரிக்கு லல்லியின் புகார் மீது அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன எனக் கேட்டு தகவல் அறியும் சட்டத்தில் மனு செய்தார். இதன் காரணமாக துறை சார்ந்த நடவடிக்கைக்கு பயந்து லல்லியின் புகார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.*

மேலே சொன்னவை புனையப்பட்ட சம்பவமாக இருந்தாலும், பல சமயங்களின் பாதிக்கப்பட்டோரும் பாதுகாவலரும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை உத்தியோகப்பூர்வ அக்கறையின்மைக்கு எதிராக பயன்படுத்தியுள்ளனர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்கள் லஞ்சம் கொடுக்காமலும்,

துன்புறுத்தலுக்கு ஆளாகமலும் கட்டளை அதிகாரிகளை அவர்களது வேலையைச் செய்ய வைக்கவும் முடியும்.

கேட்டும் தகவல் தருவதை அதிகாரிகள் சாக்குப்போக்கு சொல்லித் தாமதிக்கின்றனர் அல்லது பெரும்பாலும் மறுக்கின்றனர். எனவே, தகவல் கோரிக்கையானது பொது தகவல் அலுவலர் குறைந்தபட்ட முயற்சியில் முடிந்தவரையில் எளிமையானதாக இருக்க வேண்டும். எங்கள் நோக்கம் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஒரு வலுவான நடைமுறையை, குறிப்பாக தடுப்பு மற்றும் பாதுகாப்பு முறையை உருவாக்க வழிகாட்டுவதே ஆகும்.

வன்கொடுமைத் தடுப்பு சட்டம், விதிகள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன் துணை கொண்டு வன்கொடுமைத் தடுப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒவ்வொரு அதிகாரி மற்றும் ஒவ்வொரு வழக்கையும் கண்காணிக்க முடியும். எந்த மட்டத்திலான கட்டளை அதிகாரிகள் என்ன வேலை செய்ய வேண்டும், எந்த நேரத்தில் செய்ய வேண்டும் என்பதை விதிகள் கொண்டுள்ளதோடு இந்த சட்ட நடைமுறைப்படுத்தலை எவ்வாறு கண்காணிப்பது என்பதையும் உள்ளடக்கியுள்ளது. அவர்கள் கண்காணிக்கிறார்களா (அவர்கள் முதலில் கண்காணிப்பைச் செய்வார்களேயானால்) கண்காணிப்பின் கண்டுபிடிப்புகள், கண்டுபிடித்தவை குறித்து என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதைப் பதிவு செய்ய RTI–ஐ பயன்படுத்தலாம்.

தகவல் கோரிக்கை என்பது எப்போதும் அரசாங்கத்திடம் இருக்கும் ஒரு ஆவணம் அல்லது தகவலுக்கானதாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட அதிகாரிகளால் கட்டாயமாக தயாரிக்கப்பட வேண்டிய பல்வேறு மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு – ஆண்டு அறிக்கைகள் மற்றும் மதிப்புரைகளைப் POA பட்டியலிடுகிறது. அவற்றில் பெரும்பகுதி மாவட்ட ஆட்சியரால் தயாரிக்கப்படுகிறது. சிலவற்றை நோடல் அதிகாரி தயாரிக்கிறார். தேசிய மற்றும் மாநில குற்ற ஆவணக் காப்பகங்கள் போன்ற பிற அதிகாரப்பூர்வ துறைகளில் தரவுகளுடன் இவற்றை ஒப்பிடலாம். இந்த அறிக்கைகள் உண்மையில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்காணிப்பதன் மூலம் (மற்றும் நோடல் அதிகாரியிடம் பெறப்பட்டுள்ளதைப் போலவே) நடைமுறைப்படுத்தலின் நிலை குறித்த துல்லியமான நிலையை அறிய முடியும். ஒவ்வொரு மாநிலமும் POA-யின் நோக்கங்களை மேம்படுத்துவதற்கு பணம் ஒதுக்க வேண்டும். நமது வரிப்பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதை அறிவது நமது முதன்மையான பொறுப்பாகும்.

## 1.2 தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் என்றால் என்ன ?

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு **2(j)**–ன் படி தகவல் என்ற வரையறையின் கீழ் வரும் விஷ்யங்களை மட்டுமே தகவல் அறியும் விண்ணப்பங்கள் மூலம் கேட்க முடியும். பொதுவாக தகவல்களை 'உருவாக்குதல்' மற்றும் 'கேள்விகளுக்கு பதிலளிப்பது' இந்த வரையறைக்குள் வராது.

எந்தவொரு பொது தகவல் அதிகாரியின் கீழ் உள்ள அல்லது கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களை நாம் கேட்கலாம். மேலும் –

1. வேலை, ஆவணங்கள், பதிவுகளை ஆய்வு செய்தல்.
2. ஆவணங்கள் அல்லது பதிவுகளின் குறிப்புகள், முக்கிய அம்சங்கள் அல்லது சான்றளிக்கப்பட்ட நகல்களை எடுத்துக்கொள்ளுதல்.
3. பொருள் சான்றளிக்கப்பட்ட மாதிரிகளை எடுத்துக்கொள்ளுதல்.
4. வட்டுகள், நாடாக்கள், காணொலி நாடாக்கள் அல்லது வேறு எந்த மின்னணு முறையிலும் அல்லது கணினியில் அல்லது வேறு எந்த சாதனத்திலும் தகவல்கள் சேமிக்கப்படும் அச்சுப் பிரதிகள் மூலம் தகவல்களைப் பெறலாம்.

## 1.3 அதிகாரப்பூர்வமாக உதவி பெறுவது எப்படி ?

நீங்கள் விரும்பும் தகவலை எவ்வாறு பெறுவது என்று உங்களுக்குத் தெரியாவிட்டால் (அல்லது அது மறுக்கப்பட்டால்), உங்களுக்கு உதவுமாறு POA–வை கேட்பது நல்லது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(3)ன் கீழ் அந்த கோரிக்கையை நீங்கள் மேற்கொள்ளலாம். தகவல் அறியும் கோரிக்கையை எழுத POA எழுத உதவுவதோடு, பின்னர் அவர்கள் அதன்படி தகவல்களை வழங்க மிகவும் எளிதாகவும் இருக்கும்.

## 1.4 தகவலை எவ்வாறு பெறுவது ?

தகவல்களைப் பெறுவதற்கான நடைமுறை மிகவும் எளிதானது:

1. தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ கடிதம் எழுதி தேவையான தகவல்களைக் கேளுங்கள். இதற்கென்று குறிப்பிட்ட வடிவம் ஏதும் இல்லை (ஆனால் POA-ஐ கண்காணிக்க இந்தக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிலையான படிவங்களை பயன்படுத்தலாம்). உங்களைத் தொடர்பு கொள்வதற்குத் (தகவலை அனுப்ப) தேவையான தகவல்களைத் தவிர வேறு

எந்த தகவலையும் அல்லது வேறு எந்த தனிப்பட்ட விவரங்களையும் தரத் தேவையில்லை.

2. கட்டணத்தை (ரூபாய் 10) நீதிமன்ற கட்டண வில்லை, இந்திய தபால் ஆணை அல்லது வரைவோலையாக இணைக்கவும்.
3. சம்பந்தப்பட்ட பொது தகவல் அதிகாரிக்கு இதனை அனுப்பவும்.
4. 30 நாட்களுக்குள், தகவல் எத்தனை பக்கங்களில் உள்ளது என்பதை தெரிவிக்கும் பதிலும், ஒரு பக்கத்திற்கு ரூபாய் 2 வீதம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் கிடைக்கும் (பதில் அனுப்ப 30 நாட்களுக்கு மேல் எடுத்துக்கொண்டால், நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை).
5. எந்தவொரு நபரின் வாழ்வுரிமை அல்லது சுதந்திரத்துடன் உங்கள் கோரிக்கை தொடர்புடையதாக இருந்தால் தகவல் 48 மணி நேரத்திற்குள் வழங்கப்பட வேண்டும் (பிரிவு 7). அதனை பொருள் வரியிலேயே (Subject line) தெளிவாகக் குறிப்பிடுங்கள்.
6. கருவூலக் குறிப்பு அல்லது வரைவோலை அல்லது பணமாகக் கட்டணத்தைச் செலுத்துங்கள்.
7. உங்களுக்கு 30 நாட்களுக்குள் பதில் கிடைக்கவில்லை என்றாலோ அல்லது பதில் இல்லை என்றாலோ அல்லது பதில் முழுமையானதாக இல்லையென்றாலோ நீங்கள் முதல் முறையீட்டைத் தாக்கல் செய்யலாம் (30 நாட்களுக்குள்).
8. நீங்கள் அப்போதும் தகவலைப் பெறவில்லை என்றாலோ அல்லது பதிலில் திருப்தி அடையவில்லை என்றாலோ நீங்கள் இரண்டாவது மேல்முறையீட்டைத் தாக்கல் செய்யலாம்.
9. தகவல் அறியும் கோரிக்கை மனுவை எழுத உங்களுக்குத் தெரியாவிட்டால், இந்த விண்ணப்பத்தைத் தயாரிப்பதில் உங்களுக்கு உதவுமாறு பொது தகவல் அதிகாரியிடம் நீங்கள் கேட்கலாம் [RTI பிரிவு 5(3)].

## 1.5 முதல் மேல்முறையீடு [பிரிவு 19]

1. ஒருவர் கேட்ட தகவல்களை 30 நாட்களுக்குள் பெறவில்லை என்றாலோ அல்லது கேட்கப்பட்ட தகவல்களில் ஒரு பகுதியை மட்டுமே பெற்றிருந்தாலோ (30 நாட்களுக்குள்) அவர் முதல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்யலாம்.
2. ஆரம்ப தகவல் அறியும் கோரிக்கையைத் தாக்கல் செய்த 30 நாட்களுக்குப் பிறகு அல்லது பதில் கிடைத்ததிலிருந்து 30 நாட்களுக்குள் முதல்

மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட வேண்டும். இருப்பினும், விதிவிலக்கான சூழ்நிலைகளில் முதல் மேல்முறையீட்டை விசாரிக்கும் அதிகாரி 30 நாட்கள் கடந்த பிறகும் மேல்முறையீட்டை ஒப்புக்கொள்ளலாம்.

3. முகப்பு கடிதத்தில் பொது தகவல் அதிகாரியின் பதிலில் திருப்தி அடையாததற்கான காரணங்களைக் குறிப்பிட வேண்டும். உங்கள் முந்தைய கடிதத்தின் அனைத்து நகல்களும் – உங்கள் ஆரம்பக் கோரிக்கை மற்றும் அதன் பதில் – அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
4. முதல் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பதில் கிடைக்கவில்லை என்றாலோ அல்லது அசாதாரண சூழ்நிலைகளில் 45 நாட்களுக்குள் (அவை எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டும்) முடித்து வைக்கப்பட வேண்டும்.
5. கோரிக்கை மறுப்பை நியாயப்படுத்த வேண்டிய சுமை/ பொறுப்பு பொது தகவல் அதிகாரியைச் சார்ந்தது.

### 1.6 இரண்டாம் மேல்முறையீடு [பிரிவு 19]

1. மேல் முறையீட்டிற்கான பதில் கிடைக்கவில்லை என்றாலோ, கிடைத்த பதிலில் விண்ணப்பதாரர் திருப்தி அடையவில்லை என்றாலோ இரண்டாவது மேல்முறையீட்டை தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் தாக்கல் செய்யலாம்.
2. முதல் மேல் முறையீட்டின் முடிவிலிருந்து 90 நாட்களுக்குள் இரண்டாவது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட வேண்டும். முதல் மேல் முறையீட்டின் மீது முடிவு எடுக்கப்பட்ட தேதியிலிருந்தோ அல்லது அந்த முடிவு பெறப்பட்ட தேதியிலிருந்தோ 90 நாட்களுக்குள் அந்த முடிவுக்கு எதிராக மாநில தகவல் ஆணையத்தில் இரண்டாம் மேல்முறையீடு செய்ய உரிமையுண்டு. மேலும் தாமதத்திற்கு உரிய காரணம் தெரிவிக்கப்பட்டால், 90 நாட்கள் கடந்த பின்னரும் மேல்முறையீட்டை ஏற்றுக்கொள்ளலாம்.
3. முகப்பு கடிதத்தில் முதல் மேல்முறையீட்டு அதிகாரியின் பதிலில் திருப்தி அடையாததற்கான காரணங்களைக் குறிப்பிட வேண்டும். கடிதத்தின் அனைத்து நகல்களும் – உங்கள் ஆரம்ப கோரிக்கை மற்றும் அதற்கான பதில், உங்கள் முதல் மேல் முறையீட்டு கோரிக்கை மற்றும் அதற்கான பதில் – ஆகியவற்றை இணைக்க வேண்டும்.
4. இரண்டாவது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள், அசாதாரண சூழ்நிலைகளில் (அவை எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டும்) 45 நாட்களுக்குள் கோரிக்கை மனு முடித்து

வைக்கப்பட வேண்டும். கோரிக்கையின் மறுப்பை நியாயப்படுத்த வேண்டிய சுமை/ பொறுப்பு முதல் மேல் முறையீட்டு அதிகாரியின் மீதே உள்ளது.

## 1.7 தவகல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி கண்காணிப்பாளர்களைக் கண்காணிப்பது

தகவல் அறியும் உரிமை சட்டம், **2005** (RTI) உடன் இணைந்து சட்டம் மற்றும் விதிகளை (அதாவது சட்டம் மற்றும் விதிகள் என்ன என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்) பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அதிகாரியும் POA-ஐ நடைமுறைப்படுத்துவதை கண்காணிக்க முடியும். ஒவ்வொரு வழக்கு, விதிகள், ஒவ்வொரு பணிக்கும் துல்லியமான கால அளவுகள் மற்றும் அதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரிகளைக் கொண்டுள்ளன, இதில் சட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை கண்காணிப்பதும் அடங்கும். அவர்கள் கண்காணிப்பதை (அவர்கள் முதலில் கண்காணிப்பை செய்வார்களேயானால்) கண்காணிப்பில் கண்டறிந்தவைகள் மற்றும் கண்டறிந்தவைகளை குறித்து அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதைப் பதிவு செய்ய RTI-ஐ பயன்படுத்தலாம்.

கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், தகவல்களை கோருவதற்கான படிவங்கள் என்று எதுவுமில்லை, இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்கள் வழிகாட்டுதலுக்காக மட்டுமே. தகவல் கோரிக்கையின்போது மூன்று விஷயங்களில் தெளிவாக இருக்க வேண்டும்.

- நீங்கள் எந்த அதிகாரியிடம் கேட்கிறீர்கள்,
- கோரப்பட்ட தகவல் (ஒரு விண்ணப்பத்தில் ஒரு கோரிக்கை மட்டுமே இருத்தல் நன்று)
- தகவல் கோரும் நபரின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்கள்

கோரிக்கை விண்ணப்பத்தின்போது கீழ்கண்டவைகள் இல்லையென்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்:

- கேள்வி
- தகவலை தொகுக்க அலுவலருக்கு நிறைய வேலைகள்

கோரிக்கை சுருக்கமாகவும் எளிமையாகவும் இருப்பது சிறந்தது.

**1.8 மாதிரிப் படிவங்களைப் பயன்படுத்துவது**

இந்தக் கையேட்டில் உங்கள் பணியை எளிதாக்க உதவும் பல மாதிரிப் படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான கண்காணிப்புக்கானவை ‘D’ மற்றும் மாநில அளவிலான கண்காணிப்புக்கானவை ‘S’ எனத் தொடங்கும். தற்போது படிவங்கள் மாதத்திற்கு ‘M’, காலாண்டிற்கு (மூன்று மாதங்களுக்கு ஒருமுறை) ‘Q’, அரையாண்டிற்கு ‘H’ மற்றும் ஆண்டிற்கு ஒருமுறை ‘A’ எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். எனவே, மாவட்ட அளவிலான மாதாந்திர மாதிரிப் படிவம் ‘DM’ எனக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**1.9 பயிற்சி**

2018-19ல், தமிழ்நாடு அரசு **16** தனிச் சிறப்பு நீதிமன்றங்களை திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், பெரம்பலூர், தேனி, திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர், திருவாரூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், கடலூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 4 கட்டங்களாக **2016–17** தொடங்கி **2019–20**க்குள் உருவாக்குவதற்கான நிர்வாக ஆணையை வெளியிட்டது. பிரத்தியேக சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவுவதற்காக முதல் நிலையில் [POA பிரிவு 14] திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு ரூபாய் 3.22 கோடி கொடுக்கப்பட்டது. HRF தமிழ்நாட்டில் தனிச் சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவப்பட்ட தகவல்களைக் கேட்டு RTI தாக்கல் செய்தபோது, திட்டத்தின் இறுதி கட்டத்தை எட்டிவிட்ட போதிலும் மூன்று மாவட்டங்களில் மட்டுமே தனிச்சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டது தெரியவந்தது.

திட்டமிடப்பட்ட மற்ற **13** நீதிமன்றங்கள் என்ன ஆயிற்று **?** RTI மூலம் விண்ணப்பித்து கண்டுபிடியுங்கள்.

## 2. மாவட்ட அளவில் அறிக்கைகளை சேகரிப்பது

ஒற்றை வழக்கை கண்காணிப்பதை விட மாவட்ட அளவில் இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை கண்காணிப்பது எளிதானது. நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், அதிகாரிகள் அவர்கள் செய்ய வேண்டியதைச் செய்கிறார்களா என்பதை உறுதி செய்வதாகும். நல்வாய்ப்பாக, எந்த தேதியில் அல்லது மாதத்தில் யார் என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த சட்டம் மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகிறது. மாவட்ட அளவிலான கண்காணிப்புக்கு மாதத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே தேவை – 1 மற்றும் 15ஆம் தேதி நன்று. மீதமுள்ள நேரத்தை சட்டத்தின் செயல்பாட்டை வலுப்படுத்துவது அல்லது CVMC-க்களை வலுப்படுத்துவது அல்லது ஒரு வழக்கை கண்காணிப்பது போன்ற தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தலாம்.

இந்த அத்தியாயத்தில் நீங்கள் அறிந்து கொள்ள இருப்பவை

- சட்டத்தை கண்காணிக்கும் அதிகாரிகளின் பொறுப்புகள்.
- பிற உதவிகரமான உத்தியோகபூர்வ நடைமுறைகள்.
- தேவையான தகவல்களை எவ்வாறு பெறுவது.

### 2.1 மாவட்ட அளவிலான மாதாந்திர அறிக்கைகள்

மாவட்ட அளவில் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிக்க இரண்டு முக்கிய அதிகாரிகள் உள்ளனர் – மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்.

மாதந்தோறும் மாவட்ட ஆட்சியரிடமிருந்து வரும் இரண்டு அறிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டியவை:

- விதி 4(4)-இன் கீழ், இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவது பற்றி மாநில நோடல் அதிகாரிக்கு அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கை. 'வழக்கின் நிலைப்பாட்டில்' அது எந்த கட்டத்தில் (FIR, புலன் விசாரணை, குற்றப்பத்திரிகை, வழக்கு விசாரணை, தண்டனை அல்லது மேல்முறையீடு) மற்றும் POA-ஐ செயல்படுத்துவது தொடர்பான 'எடுக்கப்பட்ட/ எடுக்க உள்ள முன்மொழியப்பட்ட நடவடிக்கை' ஆகியவை அடங்கும்.

- விதி 12(7)-ன் படி ஒவ்வொரு வன்கொடுமை நிகழ்வின் போதும் 24 மணி நேரத்துக்குள் (விதி 12(1)) மாவட்ட கண்காணிப்பாளருடன் சேர்ந்து கள ஆய்வு (விதி 12(7)) செய்து சொத்து மற்றும் வாழ்க்கைக்கு ஏற்பட்ட சேதாரத்தை மதிப்பிட்டு, நிவாரணத்திற்கு தகுதியான பாதிக்கப்பட்டவர்கள்/ சார்ந்தவர்கள்/ சாட்சிகளின் பட்டியலை தயார் செய்து அதன் நகலை சிறப்பு நீதிமன்றம்/ தனிச்சிறப்பு நீதிமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

முதல் கட்டமாக இந்த அறிக்கைகள் அனுப்பப்படுவதை உறுதி செய்ய வேண்டும், இல்லையென்றால் அதனை செய்ய வலியுறுத்த வேண்டும். அடுத்த கட்டத்தில் இந்த அறிக்கைகளின் தரத்தை உயர்த்த முயற்சிக்கலாம்.

கண்காணிப்பில் கருத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் கேட்கப்படும் தகவலின் அளவு ஆகும். விதி 12(7) தயாரிக்கப்படும் அறிக்கைகளை கோட்பாட்டு அளவில் நாம் வருடத்தின் இறுதியில் கேட்கலாம் என்றாலும் கூட, அந்த அதிகப்படியான தகவல்கள் அனைத்தையும் ஒரு சேர ஆய்வு செய்வது சுமையானதாக இருக்கும். மேலும், நாம் மாநில வழிமுறைகளோடு காலாண்டு அடிப்படையில் ஈடுபட விரும்புகிறோம். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமாக உரையாட மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நமது பகுப்பாய்வு தயாராக இருக்க வேண்டும். தரவுகள் தயாரானவுடனேயே அதனைப் பெறுவது நன்று.

### 2.2 கால இடைவெளிக்குட்பட்ட இதர அறிக்கைகள்

ஒவ்வொரு காலாண்டிலும், POA–இன் சட்டப்பிரிவுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை மதிப்பாய்வு செய்ய DVMC கூடுகிறது, பிரிவு **15**–A(11)-இன் கீழ் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு, இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் மற்றும் முகவர்களின் பங்கு மற்றும் மாவட்ட நிர்வாகத்தால் பெறப்படும் பல்வேறு அறிக்கைகள் (விதி 17). மாவட்ட ஆட்சியர் DVMC கூட்டங்களின் அறிக்கைகளை நோடல் அதிகாரிக்கு அனுப்ப வேண்டும்.

ஒவ்வொரு காலாண்டிலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட அளவிலான உயர் ஆற்றல்மிக்க மறுஆய்வுக் குழு கூட்டங்களின் (High powered review committee/ District/ City Standing Committee meetings) குறிப்புகளை (minutes) அனுப்ப வேண்டும். (கூட்டங்கள் மாதந்தோறும் நடத்தப்படுகின்றன, ஆனால் அறிக்கைகள் காலாண்டுக்கு ஒருமுறை அனுப்பப்படுகின்றன).

ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில், மாவட்ட ஆட்சியர் ஒவ்வொரு சிறப்பு அரசு வழக்குரைஞர் மற்றும் பிரத்தியேக சிறப்பு அரசு வழக்குரைஞர் ஆகியோரின் செயல்திறனை மதிப்பாய்வு செய்து மாநில அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். (R4(2)).

## 2.3 தகவல்களைப் பெற RTI பயன்படுத்துதல்

கோட்பாட்டின்படி, DVMCயின் கூட்டத்தின் குறிப்புகள் மற்றும் மாதாந்திர அறிக்கைகள் (விதி 4(4)) தேவையான அனைத்து தகவல்களையும் அளிக்க வேண்டும். இருப்பினும், நடைமுறையில், பெரும்பாலான மதிப்பாய்வுகள் நடத்தப்படுவதில்லை, அல்லது அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சரியான நேரத்தில் அனுப்பப்படுவதில்லை. இந்த அறிக்கைகள் (குறிப்பாக மாதாந்திர அறிக்கைகள் மற்றும் மதிப்பாய்வுகள்) ஆண்டுதோறும் கேட்கப்பட்டால், சில நேரங்களில் மறுக்கப்படுகின்றன. எனவே, சில கூடுதல் மாதாந்திர தகவல் கோரிக்கைகள் தேவைப்படுகின்றன. கீழ்கண்ட அட்டவணையில், அதிகாரிகள், அவர்களது கடமைகள் மற்றும் தகவல்களைப் பெறுவதற்கான RTI மாதிரிப் படிவங்களின் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அரசாங்க வழிமுறைகள் இதைச் செய்ய பழக்கப்படாததால், ஆரம்ப கட்டங்களில் கோரிக்கைகள் விரிவானதாக இருக்க வேண்டும். மாதாந்திர அறிக்கைகள் விரிவானதாக மாறிய பிறகு, அவற்றை மட்டுமே கேட்டால் போதும். ஆனால் அதுவரை, தகவல்களைப் பெற பல கோரிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டியிருக்கும்.

## 2.4 பூர்வாங்க தகவல்களைப் பெறுதல்

சரியான தகவல்களோடு தயாராவதே முதல் படி. சட்டம் மற்றும் விதிகளை நன்கு அறிந்து கொள்ளுங்கள். யார் நடைமுறைப்படுத்தும் அதிகாரி என்பதை தெரிந்து கொள்ளுங்கள். நடைமுறையில் உள்ள நடைமுறைப்படுத்தும் மாநில வழிமுறைகள் மற்றும் கண்காணிப்பு நடைமுறைகளைத் தெரிந்துகொள்வதே கண்காணிப்பதற்கான ஒரு முன்நிபந்தனையாகும்.

**கீழ்கண்ட தகவல்களைப் பெறுங்கள்:**

1. நடைமுறையிலுள்ள மாநில வழிமுறைகள்
2. தகுந்த அதிகாரிகளை நியமிக்கும் அரசாங்க ஆணை, வழிமுறைகளை நிறுவுதல், அந்த பதவிகளில் உள்ள உண்மையான நபர்களின் விவரங்கள் மற்றும் அவர்களின் தொடர்பு விவரங்கள்.

3. இந்த தகவலை விரைவில் பெறுங்கள், அல்லது தகவல் அறியும் உரிமை கோரல் கீழ் விண்ணப்பிக்கவும். கண்காணிக்கப்பட வேண்டிய வழக்கை அடையாளம் காண்பதும், வழக்கை கண்காணிக்கத் துவங்குவதும் ஒரே நேரத்தில் தொடங்கலாம். நீங்கள் தொடங்குவதற்கு முன் இந்த தகவல்கள் அனைத்தும் உங்கள் கையில் இருக்கும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

பின்வரும் ஆவணங்களின் நகல்களைப் பெறுங்கள் (புத்தகக் கடைகளில் கிடைக்கும்)

1. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 மற்றும் விதிகள். (ஒவ்வொரு மாநிலத்திற்கும் தகுந்தாற்போல் சில விதிகள் இருக்கும்).
2. இழப்பீட்டுத் தொகைகளின் புதுப்பிக்கப்பட்ட நகல் [12(4) அட்டவணை இணைப்பு I]. 1 அக்டோபர் 2019 நிலவரப்படி 14 ஏப்ரல் 2016 தேதியிட்ட GST 424 (ï) ஆகும்.

பின்வருவனவற்றின் நகல்களை சமூக நல அமைச்சகம் அல்லது சமூக நலத்துறையிலிருந்து பெறுங்கள். முதலில் அவர்களிடம் கேளுங்கள், அவர்கள் அதைக் கொடுக்கவில்லை என்றால், RTI பயன்படுத்தி அதைப் பெறுங்கள் (அவற்றில் பல நல்லாட்சி மற்றும் வெளிப்படைத்தன்மை வழிகாட்டுதல்களின்படி வலைத்தளங்கள், பத்திரிகை அறிவிப்புகள் மூலம் கட்டாயமாக பகிரப்பட வேண்டும். இருப்பினும், நேரடியாக RTI மூலமாக கேட்பதே POA-ஐ நடமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு அவர்களது கடமைகள் பற்றி படிப்பிக்க, விதிகள் என்ன, அவற்றை செய்யவில்லை என்றால் அதற்கான தண்டனை என்ன என்பது பற்றி அவர்களுக்கு விளக்க சிறந்த வழிமுறை ஆகும். நடைமுறையில், பெரும்பாலானவர்கள் அறியாதவர்கள்). நேரடியாகவும் RTI மூலமாகவும் கேட்பது அதிகாரிகளை கற்றுக்கொள்ள வைப்பதற்கான ஒரு சிறந்த வழிமுறையாகும் POA–ஐ செயல்படுத்துவதும், அவற்றில் உள்ள விதிகள் என்ன, மற்றும் செயல்படுத்தாததற்கான அபராதங்கள் என்ன என்பதையும் அவர்களுக்கு உணர்த்துவதாகும்.

1. வன்கொடுமை ஏற்படக்கூடிய பகுதிகளின் அறிவிப்பு, அதாவது ‘வன்கொடுமை நடக்கக்கூடும் என்று நம்பக்கூடிய பகுதி அல்லது ஒரு வன்கொடுமை நடக்கக்கூடும் என்ற அச்சம் உள்ள பகுதி’ [விதி 3(1)] (DA04).
2. பட்டியல் சமூகத்தினருக்கான பாதுகாப்பு கலத்தை அமைப்பது பற்றிய அரசிதழ் அல்லது அரசாங்க அறிவிப்பு [விதி 8].

3. POA-ஐ நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளை ஒருங்கிணைக்கவும், பணிகளை மதிப்பாய்வு செய்யவும், முன்னுரிமையாக பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரியை மாநில நோடல் அதிகாரியாக (பொதுவாக சமூக நலத்துறை முதன்மைச் செயலாளர்) நியமித்து அரசாங்கம் அறிவிப்பாணை வெளியிட வேண்டும். தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் நலத்துறையின் முதன்மைச் செயலாளர்தான் நோடல் அதிகாரி.

4. வன்கொடுமை ஏற்படக்கூடிய பகுதியில் உள்ள சிறப்பு அதிகாரியின் பெயர் மற்றும் பதவி. இது பொதுவாக மாவட்ட அளவில் இருக்கும். இது தொடர்பான அரசாங்க அறிவிப்பாணையைக் கேளுங்கள். தமிழ்நாட்டில் பொதுவாக மாவட்ட ஆட்சியர்கள்தான் சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். (G.O. (Ms.). எண் 96 ஆதி–திராவிடர் நலத்துறை (PA) தேதியிட்ட 10.08.2006).

5. மாநில அளவிலான விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழு (SVMC) கட்டமைப்பது பற்றிய அரசாணை [விதி 16 (1)].

6. மாவட்ட அளவிலான விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழு (DVMC) கட்டமைப்பது பற்றிய அரசாணை [விதி 17(1)]. இது அனைத்து உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் பதவிகளைக் கொண்டிருக்க வேண்டும் [விதி 17(2)]. சிலர் அலுவல் சார்ந்த பொறுப்பு உறுப்பினர்கள் என்பதை நினைவில் கொள்க, இது குறிப்பிடப்பட வேண்டும்.

7. மாநில அரசாங்கத்தின் அரசிதழில் அறிவிக்கப்பட்ட மாநில எதிர்பாரா நிலைக்கான திட்டம் [விதி 15(1)]. இது சமூக நலத்துறை மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், இந்திய அரசு, மாவட்ட நீதிபதி, துணைச்சார்பு நீதிபதி, காவல்துறை தலைவர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்படலாம், ஏனெனில் அவர்களிடம் ஒரு நகல் இருக்கும் [விதி 15(2)].

8. இந்த சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் மற்றும் பிரத்தியேக சிறப்பு நீதிமன்றத்தை அமைக்கும் அரசிதழ் அறிவிப்பாணை [சட்ட பிரிவு14]. உங்கள் மாவட்டத்திற்கான இந்த அறிவிப்பைப் பெற்றால் போதுமானது.

9. இந்த சட்டம் மற்றும் விதிகள் [விதி 4(1-B)] இன் கீழ் வழக்குகளை நடத்துவதற்காக அரசு வழக்குரைஞர்கள் குழு அல்லது சிறப்பு மூத்த வழக்குரைஞர்களின் குழுவை சிறப்பு அரசு வழக்குரைஞராகக் குறிப்பிடும் அரசிதழ் அறிவிப்பு.

10. மாநில ஆண்டு அறிக்கையின் நகல் [விதி18].

### 2.5 மாதிரிப் படிவங்களைப் பயன்படுத்துதல்

இந்த கையேட்டில் பணியை எளிதாக்க உதவும் பல வடிவங்களும், அதில் குறியீட்டு எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான கண்காணிப்புக்கானவை ‘D’ மற்றும் மாநில அளவிலான கண்காணிப்புக்கானவை ‘S’ உடன் தொடங்குகின்றன. காலத்தை குறிப்பதற்கு, மாதத்திற்கு ‘M’, காலாண்டிற்கு (மூன்று மாதங்களுக்கு ஒரு முறை) ‘Q’, அரையாண்டிற்கு ‘H’ மற்றும் ஆண்டிற்கு ஒருமுறை ‘A’. எனவே மாவட்ட அளவிலான மாத வடிவம் ‘DM’ உடன் தொடங்கும்.

### 2.6 குறிப்பிட்ட கால இடைவெளியில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளைப் பெறுதல்

ஒரு ஆண்டில் மொத்தம் 23 கோரிக்கைகள் அனுப்பப்பட வேண்டும். அவற்றில், 8 மாதாந்திரம், 3 காலாண்டு, 3 அரையாண்டு மற்றும் ஆண்டுக்கு ஒருமுறை 8, நினைவூட்டல் ஒன்றும் அனுப்ப வேண்டியவை.

**கண்காணிப்பு நாட்காட்டி**

| வ.எண் | காலம் | பொறுப்பு அதிகாரிகள் | விதி/ சட்டப் பிரிவு | படிவ எண் |
|---|---|---|---|---|
| **1** | **மாதாந்திரம்** | | | |
| 1.1 | மாதாந்திர அறிக்கை | மாவட்ட நீதிபதி | R4(4)(b) | DM01 |
| 1.2 | மாதாந்திர அறிக்கை | குற்றவழக்கு தொடர்புத் துறை துணை இயக்குநர் | R 4(4)(b) | DM02 |
| 1.3 | நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு | மாவட்ட நீதிபதி | R 12(7) | DM03 |
| 1.4 | வன்கொடுமை நடந்த இடத்தில் களஆய்வு | மாவட்ட நீதிபதி | R 12 (1) | DM04 |
| 1.5 | வன்கொடுமை நடைபெற்ற இடத்தில் களஆய்வு | மாவட்ட காவல் கண்காணிப்பளர் | R 12 (1) & (3) | DM05 |
| 1.6 | இழப்பீடு | மாவட்ட ஆட்சியர் | R 12(4) | DM06 |

| வ.எண் | காலம் | பொறுப்பு அதிகாரிகள் | விதி/ சட்டப் பிரிவு | படிவ எண் |
|---|---|---|---|---|
| 1.7 | TAME | மாவட்ட ஆட்சியர் | R 11 | DM07 |
| 1.8 | தாமதமான விசாரணை | மாவட்ட காவல் கண்காணிப்பளர் | R7(2)& R7(2)A | DM08 |
| **2** | **காலாண்டு** | | | |
| 2.1 | DVMC கூட்டங்கள் | மாவட்ட நீதிபதி | R 17(3) | DQ01 |
| 2.2 | புலனாய்வு குறித்த மதிப்பாய்வு அறிக்கை | நோடல் அதிகாரி | R 7(3) | DQ02 |
| 2.3 | குற்ற விடுவிப்புக்கான பொறுப்புடைமை | காவல் ஆணையர்/ காவல் கண்காணிப்பாளர் | C-Memo | DQ03 |
| **3** | **அரையாண்டு – ஜனவரி & ஜூலை** | | | |
| 3.1 | SP/DSP/IO/புள்ளியியல் ஆய்வாளர் | நோடல் அதிகாரி | S21(2((iv) | DH01 |
| 3.2 | SVMC | நோடல் அதிகாரி | R 16(2) | DH02 |
| 3.3 | SPP/ESPP செயல்திறன் ஆய்வறிக்கை | நோடல் அதிகாரி | R4(2) | DH03 |
| **4** | **ஆண்டுக்கு ஒருமுறை (ஜனவரி)** | | | |
| 4.1 | மூத்த வழக்கறிஞர்கள் குழு, PP, ESPP நியமனம் தொடர்பான அரசிதழ் அறிவிப்பு | நோடல் அதிகாரி | R4(1B) | DA01 |
| 4.2 | DVMC – உறுப்பினர் விவரங்கள் | மாவட்ட நீதிபதி | R17(2) | DA02 |

| வ.எண் | காலம் | பொறுப்பு அதிகாரிகள் | விதி/ சட்டப் பிரிவு | படிவ எண் |
|---|---|---|---|---|
| 4.3 | SC/ST சட்டத்தில் பயிற்சி பெற்ற காவலர்கள் விவரங்கள் | நோடல் அதிகாரி | ADTW, POA ஆண்டு அறிக்கை, 2017 | DA03 |
| 4.4 | கிராமங்களில் செய்யப்பட்ட கணக்கெடுப்புகள் | நோடல் அதிகாரி | S21(2)(vii) | DA04 |
| 4.5 | NGO விவரங்கள் | மாவட்ட நீதிபதி | R3(ix) | DA05 |
| 4.6 | பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பு | சிறப்பு நீதிமன்றம்/ பிரத்யேக சிறப்பு நீதிமன்றம் | S15A(7) | DA06 |
| 4.7 | சிறப்பு நீதிமன்றங்கள் | நோடல் அதிகாரி | S14(1) | DA07 |
| 4.8 | குற்றவிடுவிப்புக்கு பின்னர் மேல்முறையீடு | குற்றவழக்கு தொடர்புத்துறை துணை இயக்குநர் | ADTW, POA ஆண்டு அறிக்கை, 2017 | DA08 |
| **5** | **நினைவூட்டல்** (RTI-ன் கீழ் அல்ல) | | | |
| 5.1 | SVMC நினைவூட்டல் | முதலமைச்சர் | R16(2) | DR01 |

அட்டவணையைப் பயன்படுத்துவது எளிது. மாதத்தின் முதல் நாளில், பொருத்தமான RTI படிவத்தை நிரப்பவும் (இந்தக் கையேட்டின் இணைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது) மற்றும் முந்தைய மாதங்களின் இந்த சட்ட நடைமுறைப்படுத்தல் பற்றிய தகவல்களுக்கு அறிக்கை அளிக்கும் அலுவலரிடம் கேளுங்கள். ஒப்புதல் அட்டையுடன் (Acknowlege card) பதிவுத் தபாலில் ரூபாய் 10-க்கான நீதிமன்ற கட்டண வில்லை/ அரசாங்கக் கருவூல ஒப்புகைச் சீட்டு செலுத்தி தகவல்களை கேட்டு விண்ணப்பிக்கவும்.

**கண்காணிப்பு நாட்காட்டி**

| **தேதி** | **மாதம்** | **மாநில வழிமுறைகளுக்கான செயல்பாடுகள்** | **விதி** | **அறிக்கை அளிக்க வேண்டிய அதிகாரி** | **RTI படிவ எண்** |
|---|---|---|---|---|---|
| 20 | ஜனவரி – டிசம்பர் (அனைத்து மாதமும்) | இச்சட்டத்தின் கீழ் பதியப்பட்ட வழக்குகள் குறித்து மாதாந்திர மதிப்பாய்வு மற்றும் அத்தியாயம் IV-ன் கீழ் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதோடு, குற்றத் தொடர்புத்துறை இயக்குநருக்கும் மாநில அரசுக்கும் மாதாந்திர அறிக்கை அனுப்ப வேண்டும். | R4(4)(b) | மாவட்ட நீதிபதி (மாவட்ட ஆட்சியர்) | DM01 |
| | | நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அறிக்கை சிறப்பு நீதிமன்றம்/ பிரத்தியேக சிறப்பு நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் | R12(7) | மாவட்ட நீதிபதி | DM03 |
| | | கள ஆய்வு அறிக்கைகள் | R12(1) | மாவட்ட நீதிபதி | DM04 |
| | | வழங்கப்பட்ட நிவாரணத் தொகை (யாருக்கு, | R12(4) | மாவட்ட நீதிபதி | DM06 |

| தேதி | மாதம் | மாநில வழிமுறைகளுக்கான செயல்பாடுகள் | விதி | அறிக்கை அளிக்க வேண்டிய அதிகாரி | RTI படிவ எண் |
|---|---|---|---|---|---|
| | | எத்தனை நாட்களில், தொகை) | | | |
| | | பயணப்படி மற்றும் தினப்படி (யாருக்கு, எத்தனை நாட்களில், தொகை) | R11 | மாவட்ட நீதிபதி | DM07 |
| | | 60 நாட்களுக்குள் புலனாய்வை முடிக்காத காரணத்திற்கான எழுத்துப்பூர்வ விளக்கம் (பெறப்பட்ட எண்ணிக்கை) | R7(2)(2A) | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் | DM08 |
| 30/ 31 | மார்ச், ஜூன் செப்டம்பர், டிசம்பர் | புலனாய்வு அதிகாரியால் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றி காவல்துறை இயக்குநர், குற்றவழக்கு தொடர்புத் துறையின் பொறுப்பு அதிகாரி, குற்ற வழக்கு தொடர்புத்துறை இயக்குநர், மாநில அரசாங்கத்தின் உள்துறை மற்றும் ஆதி திராவிடர் நலத்துறையின் செயலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வு | R7(3) | நோடல் அதிகாரி | DQ02 |
| | | இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை மதிப்பாய்வு செய்ய மாவட்ட நீதிபதியைத் தலைவராகவும், மாவட்ட சமூக நல அதிகாரியை உறுப்பினர் செயலாளராகவும் கொண்ட DVMC கூட்டத்தில், பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்ட நிவாரணம், மறுவாழ்வு வசதிகள் மற்றும் அது | R17(3) | மாவட்ட நீதிபதி | DQ01 |

| தேதி | மாதம் | மாநில வழிமுறைகளுக்கான செயல்பாடுகள் | விதி | அறிக்கை அளிக்க வேண்டிய அதிகாரி | RTI படிவ எண் |
|---|---|---|---|---|---|
| | | சம்பந்தப்பட்ட இதர விஷயங்கள், இச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகள், இச்சட்டத்தின் கூறுகளை நடைமுறைப்படுத்த பொறுப்பான பல்வேறு அதிகாரிகள்/ முகவர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகத்தால் பெறப்பட்ட அறிக்கைகள் | | | |
| | | ஒவ்வொரு காலாண்டும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட மாவட்ட அளவிலான உயர்மட்ட அதிதிறனுடைய மதிப்பாய்வு குழுவின் மாதாந்திர கூட்ட அறிக்கை | C-Memo | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் | DQ03 |
| 30/ 31 | அக்டோபர் மற்றும் ஏப்ரல் | SVMC கூட்டத்தை நடத்துவதற்கான நினைவூட்டல் கடிதம் | R16(2) | முதலமைச்சர் | DR01 |
| 30/ 31 | ஜனவரி; ஜூலை | சிறப்பு அரசு வழக்குரைஞர்/ பிரத்யேக அரசு வழக்குரைஞர்களின் செயல்பாடுகளைப் பற்றி மாவட்ட நீதிபதி மற்றும் குற்ற வழக்குத் தொடர்புத் துறை/ குற்ற வழக்குத் தொடர்புத்துறைக்கு பொறுப்பான அதிகாரியால் அரையாண்டு மதிப்பாய்வு நடத்தப்பட்டு மாநில அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை. | R4(2) | மாவட்ட நீதிபதி | DH03 |

| தேதி | மாதம் | மாநில வழிமுறைகளுக்கான செயல்பாடுகள் | விதி | அறிக்கை அளிக்க வேண்டிய அதிகாரி | RTI படிவ எண் |
|---|---|---|---|---|---|
| 1 | ஜனவரி | விழிப்புணர்வைப் பரப்புவதற்காக இணைந்து வேலை செய்த தன்னார்வு தொண்டு நிறுவனத்தின் பெயர் மற்றும் வழங்கப்பட்ட பணம் | R3(ix) | மாவட்ட நீதிபதி | DA06 |
| 1 | ஜனவரி | கணக்கெடுக்கப்பட்ட கிராமங்களின் பெயர்கள் | S21(2)(vii) | நோடல் அதிகாரி | DA05 |
| மூன்று ஆண்டுக்கு ஒருமுறை (அடுத்து 2020ல்) | | சிறப்பு நீதிமன்றத்திலும், பிரத்தியேக சிறப்பு நீதிமன்றத்திலும் வழக்கு நடத்துவதற்கு மாவட்ட நீதிபதியின் பரிந்துரையின் பேரில் 7 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவமுள்ள மூத்த வழக்கறிஞர்களின் குழுவை ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநில அரசு உருவாக்கும். இந்தக் குழுவானது மாநில உத்தியோகப்பூர்வ அரசிதழில் வெளியிடப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். | 4(1B) | நோடல் அதிகாரி | DA02 |

